# தமிழ் இணையக் கல்விக்கழகம்
## சென்னை – 600 025.

## இளநிலைத் தமிழியல் – பட்டம் (B.A. TAMILOLOGY – Degree)
## மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

## ஜனவரி–பிப்ரவரி 2026
## D021 இலக்கணம்–3 (பொருள்)

**காலம் : 3 மணி நேரம்** **மதிப்பெண்கள் : 75**

(குறிப்பு : பிரிவு – 1இல் இருந்து அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு – 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு – 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடையளிக்க வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

### பிரிவு – 1

**ஒரு சொல் / தொடரில் விடை தருக.** **(15x1=15)**

1. இருவகைப் பொருள்கள் யாவை?
2. அன்பின் ஐந்திணை எவை?
3. இடந்தலைப்பாட்டின் மூன்று வகைகளை எழுதுக.
4. இயற்றமிழுள் அடங்கும் நூல்கள் யாவை?
5. தலைவி அறத்தொடு நிற்கும் கிளவிகள் எத்தனை?
6. நம்பியகப்பொருளின் ஆசிரியர் யார்?
7. அகப்பாட்டினுள் வரும் பொருள்கள் எவை?
8. முதற்பொருள் எத்தனை வகைப்படும்? அவையாவை?
9. தொல்காப்பியர் குறிப்பிடும் அகத்திணை எத்தனை? புறத்திணை எத்தனை?
10. வெட்சி எந்த அகத்திணையின் புறன்?
11. வஞ்சித் திணையின் துறைகள் எத்தனை?
12. காஞ்சித்திணை எதனைக் கூறுகின்றது?
13. உழிஞைக் கொடியின் இக்காலப் பெயர் என்ன?
14. இறப்பு, நிகழ்வு, எதிர்வு எனும் மூன்று கால நிகழ்ச்சிகளையும் உணர்ந்து கூறும் ஆற்றலுடையவன் யார்?
15. மண்ணுமங்கலம் என்றால் என்ன?

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக. (5x3=15)**

16. நாற்கவிராச நம்பி – ஆசிரியர் குறிப்பு தருக.
17. வரைதல் வேட்கை என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
18. உடன்போக்கு எப்போது நிகழும்?
19. அகப்புறக் கைக்கிளை – விளக்கம் தருக.
20. புறம் என்பதன் விளக்கம் யாது?
21. நெடுமொழி கூறல் என்பது யாது?
22. பாடாண்பாட்டு என்னும் துறையை விளக்குக.
23. கற்பு 'முல்லை' என்பதற்கு கூடுதலாகத் தரப்படும் இரு விளக்கங்களைக் குறிப்பிடுக.

## பிரிவு – 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக. (3x15=45)**

24. (அ) அகப்பொருள் இலக்கணங்கள் குறித்து கட்டுரை தருக.

(அல்லது)

(ஆ) ஒருவழித் தணத்தலையும் அதன் வகைகளையும் விளக்கி எழுதுக.

25. (அ) கைக்கிளை, பெருந்திணை குறித்து விளக்கி எழுதுக.

(அல்லது)

(ஆ) வெட்சியின் இலக்கணமும் வகையும் குறித்து விளக்குக.

26. (அ) போர்க்களத்தில் வீரச்செயல்கள் குறித்து எழுதுக.

(அல்லது)

(ஆ) பெண்பால் கூற்று பெருந்திணை குறித்து விளக்கி எழுதுக.

❋❋❋